# திருமறைத்தீபம்

**THE BIBLE LAMP**

மலர் 1 ஜூலை - செப்டெம்பர் 1995 இதழ் 3


## தேவன் அன்புகூரும் திருச்சபை !

அன்புள்ள வாசகர்களே,

இவ்விதழில் உள்ள எல்லா அம்சங்களும் ஒரு விதத்தில் கிறிஸ்து இயேசுவின் திருச்சபையோடு சம்பந்தமுள்ளவையாக அமைந்து விட்டன. சிறப்புக் கட்டுரையான 'கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை', 'என் சபையைக் கட்டுவேன்' என்ற இயேசுவின் வைராக்கியமுள்ள வார்த்தைகளின் தாற்பரியத்தை உற்று நோக்குகின்றது.



திருச்சபைக்கு மதிப்பில்லாத இந்நாட்களில், அதைப்பற்றித் திருமறை தரும் விளக்கத்தை அனைவரும் ஊன்றிப்படித்தல் அவசியம். அத்திருச்சபைக்குக் கிறிஸ்துவே அத்திவாரமிட்டுக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறார். இயேசுவால் இடப்பட்டுப் பூர்த்தியான, அத்திவாரத்தை மறந்துவிட்டு, மீண்டும் கட்டிடத்திற்கு அத்திவாரம் போடத் துணிந்துள்ள, புத்திசாலிகளின் வீண்முயற்சியை 'அப்போஸ்தலப்பணி இன்றும் தொடர்கிறதா?' என்ற கட்டுரை ஆராய்கிறது.

கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும், அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும் அத்திவாரமாகக் கொண்டு எழும்பிக் கொண்டிருக்கும், திருச்சபையாகிய அக்கட்டிடத்தில்தான் எத்தனைவிதமான கற்கள். உயர்வு தாழ்வின்றி, சான்றோர்களையும், சாதாரண மனிதர்களையும் உள்ளடக்கி, வண்ணக்கலவையோடு வளர்ந்து வரும் அத்திருச்சபையாகிய கட்டிடத்தின் ஒரு விலை மதிப்பில்லாக் கல்தான் வில்லியம் கேரி. பாரதத்திரு நாட்டின், வங்காளக்குடா நாட்டில், வறுமையைத் துணையாகவும், விண்ணையே எல்லையாகவும் கொண்டு தன்னை ஆட்கொண்ட, ஆண்டவராம் இயேசுவுக்குத் திருப்பணி புரிந்தார் இந்தத்திருமகன். எங்கிருந்தோ வந்து, மேய்ப்பனாய், நல்லாசிரியனாய், நற்சேவகனாய்ப், பல மொழிகளறிந்த பண்டிதனாய், திருமறையின் பகுதிகளை வங்காளம், மற்றும் பல இந்திய மொழிகளிலும், மொழி பெயர்த்துக் கிறிஸ்துவிற்குப் பெரும்பணி புரிந்த கேரியின் சரிதமும் இவ்விதழில் ஆரம்பமாகின்றது.

எந்தப்போதனைகளும், கோட்பாடுகளும், வில்லியம் கேரியை அருட்பணி ஊழியத்திற்கும், வங்காளத்திற்கும் உந்தித்தள்ளினவோ அந்தப்போதனைகளைத்தான் நாம் 'கிருபையின் போதனைகள்' என்று அழைக்கிறோம். கர்த்தருக்கே எல்லா மகிமையையும் கொடுக்கும் அந்தப் போதனைகளின் அடிப்படையில் திருச்சபைகள் இன்று எங்கும் எழுந்து கொண்டிருக்கின்றன. கிருபையின் போதனைகளை நிராகரிக்கப் பலர் முற்பட்டதன் காரணம் என்ன என்று இவ்விதழில் 'கிருபையின் போதனைகள்' என்றால் என்ன? என்ற பகுதி ஆராய்கின்றது. திருச்சபை வரலாற்று அறிவின் அவசியத்தை நாம் ஏற்கனவே இப்பத்திரிகை மூலம் வற்புறுத்தியிருக்கிறோம். ஆகஸ்தீன், பெலேஜியஸ் போன்றோரையும், இன்னும் பலரையும் நாம் திருச்சபை வரலாற்றில் சந்திக்கப் போகிறோம். இவர்கள் காலத்துப் போராட்டங்கள், நமக்குப் புதிதல்ல என்று போகப்போக நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அதுவரைப் பொறுமையாக அவர்களைப் பற்றி இவ்விதழ்களில் கவனத்தோடு படியுங்கள்.

சிறப்பிதழாக, மேலதிக பக்கங்களோடு, புதிய அம்சங்களை உள்ளடக்கி இவ்விதழ் வெளிவருகிறது. கர்த்தர்தாமே இதனை உங்கள் அனைவரது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஆசீர்வாதமாக இருக்கச் செய்வாராக!

அன்புடன்,
ஆசிரியர்

**உள்ளே**

- வினாவிடை முறையில் அமைந்த -

### கிறிஸ்தவக் கோட்பாடுகள்

இவ்விதழிலிருந்து தொடராக, வினாவிடை முறையில் அமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள், விளக்கத்தோடு வெளிவருகின்றது. இம்முறையில், சீர்திருத்தக்காலப் (Reformation) பகுதியிலும், அதற்குப் பின்பும் திருச்சபைகளில் திருமறை தெளிவாகப் போதிக்கப் பட்டது. ஸ்பர்ஜன், தன்காலத்தில் பாப்திஸ்து கொள்கை அடிப்படையில் இத்தகைய 'திருமறைக் கல்வி' நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். ஒவ்வொருவரும் முறையாக வேத அறிவைப் பெற்றுக் கொள்ள இது ஒரு சிறந்த பாடமுறையாக அமையும்.

### இந்த இதழில்


- ஆசிரியரின் மடல்
- கிருபையின் போதனைகள்
- திருச்சபை
- அப்போஸ்தலப்பணி
- வில்லியம் கேரி
- புத்தக விமர்சனம்
- திருமறைக்கல்வி
- கேள்வி? பதில்!

சிறப்புக் கட்டுரை

# கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை

**பாகம் - 1**


*கர்த்தர் இவ்வுலகில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை, இன்று என்றுமே இல்லாத அளவிற்குப் பேராபத்து சூழ்ந்துள்ளது. இந்தப் பேராபத்து திருச்சபையை தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இல்லாமல், அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், அலட்சியப்படுத்துவதாக அமைந்துள்ளது. திருச்சபைக்கும், அதுபற்றி திருமறை தரும் போதனைகளுக்கும் இன்று எங்கும் மதிப்பில்லை. திருமறையை அலட்சியம் செய்து, திருச்சபை என்ற பெயரில் கேலிக்கூத்துகள் நடத்துபவர்களும், திருச்சபையே தேவையில்லை என்று ஆணவத்தோடு அலைபவர்களுமே இன்று அவனியிலே பவனி வருகிறார்கள். திருமறை தெளிவோடு போதிக்கும், கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமான திருச்சபையைப் பற்றிய திருமறையின் போதனையை இக்கட்டுரை அலசுகிறது. - ஆசிரியர்.*

ஆதியிலே திருச்சபைக்கு ஏற்பட்ட ஆபத்து அதைத் தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இருந்ததாக திருச்சபை சரித்திரத்திலே பார்க்கிறோம். அப்படியான ஆபத்துகள் திருச்சபையை அழிப்பதைவிட, அதன் வளர்ச்சிக்கே எப்போதும் தூண்டுகோல்களாக அமைந்தன. ஆனால் இன்று அதைச் சூழ்ந்துள்ள ஆபத்து வேறுவிதமானது. சதியிலே வல்லவனான சாத்தான் தன்னுடைய வழிமுறைகளை நடைமுறைக்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்து, இன்று திருச்சபையை அழிப்பதற்கு ஒரு புது வழியைப் பயன்படுத்துகிறான். அவன் இன்று திருச்சபையை ஒரு பொருட்டாகக் கருதாமல், அதை அலட்சியப்படுத்த அனைவரையும் ஊக்குவிக்கிறான்.

### திருச்சபைக்கு ஆபத்தா ?

திருச்சபைக்கு என்ன, அப்படி ஒரு ஆபத்தா? என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இதென்ன வீணான ஒரு விவாதம் என்று சிலர் ஒதுங்கிப் போகலாம். ஆனால், நாம் அறிய விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், இருக்கும் நிலை பொய்யாகிவிடாது. இது உண்மையா, இல்லையா என்று அறிந்து கொள்ள, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்களை நோக்கிச் சில கேள்விகளைக் கேட்பதுதான். கிறிஸ்தவனாகிய என் வாழ்க்கையில் திருச்சபைக்கு நான் எத்தகைய இடத்தைக் கொடுத்திருக்கிறேன்? என்று நீங்கள் உங்களையே கேட்டுப்பாருங்கள். இயேசு தன்னையே பலி கொடுத்து, நேசத்தோடு கட்டியெழுப்பும் அந்தச்சபையின் ஓர் அங்கமான நான், அச்சபைக்குரிய இடத்தை என் வாழ்க்கையில் கொடுத்திருக்கிறேனா? அச்சபையைப்பற்றிய சரியான அறிவைப் பெற்றிருக்கிறேனா? உள்ளூர் சபையில் அங்கத்தவனாக இருப்பது அவசியமென்று உணர்ந்து, அக் காரியத்தை மனப்பூர்வமாக செய்திருக்கிறேனா? 'வண்ணாத்திப்பூச்சி'யைப்போல சபைவிட்டு சபையாக தேன்தேடி அலைந்து கொண்டிருக்காமல் ஒரே சபையில் நிலையாக நின்று கர்த்தரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறேனா? அச்சபை மதிப்போடும், மங்காத் தன்மையோடும், நான் வசிக்கும் சமுதாயத்தில் ஒளியேற்றி நிற்க, கர்த்தர் எனக்குக் கொடுத்துள்ள தாலந்துகளை யெல்லாம், தான்தோன்றித்தனமாக, நான் நினைத்த விதத்தில், சுய நன்மைக்காகப் பயன்படுத்தாது, உள்ளூர் சபை யொன்றின் ஐக்கியத்திற்கு ஒப்புக் கொடுத்து, அச்சபை வளர்ச்சிக்காகப் பயன்படுத்துகிறேனா? இப்படி, இக்கேள்விகளை எதிர்நோக்கும் போது குற்ற உணர்வால் உன் மனது துடிக்கின்றதல்லவா?

இது மட்டுமா? திருச்சபைப் போதகர்களும், ஊழியக்காரர்களும் கேட்க வேண்டிய கேள்விகளும் நிறைய உண்டு. கர்த்தர் கொடுத்துள்ள, பொறுப்போடு செய்ய வேண்டிய ஊழியத்தை, சுயலாபத்திற்கல்லாது, அவர் வார்த்தையின்படி, செய்து வருகிறேனா? ஊதியத்திற்காகவும், குடும்பத்திற்காகவும், ஊழியத்தைப் பயன்படுத்தாமல், எத்தகைய இடர்களையும், இயேசுவுக்காகத் தாங்கும் உறுதியோடும், தியாக மனப்பான்மையோடும் செயல்படுகிறேனா? ஆட்டம், பாட்டம், கூத்து என்று களியாட்டங்களில் ஆடுகளை வழிநடத்தாமல், நாம் வணங்கும் தேவன் எரிச்சலுள்ள தேவன் என்ற அறிவு பூர்வமான மனப் பான்மையோடு ஆராதனையில் அவர்களை இட்டுச் செல்கிறேனா? வேதமே நம் பார்வைக்குத் தீபமாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறதென்ற நிலையான



நம்பிக்கையோடு, அவ்வேதத்தைச் சரியான முறையில் போதிக்கிறேனா? தவறு செய்பவர்களை அன்போடும், ஆதரவோடும், கண்டித்துத் திருத்தி நேர்வழியில் நடத்துகிறேனா? நண்பனே! இக்கேள்விகள் உன் இருதயத்தைச் சுட்டுப் பொசுக்குகின்றனவா? அல்லது, நீ உண்மையோடுதான் நடந்து வநதிருக்கிறாய், என்ற நம்பிக்கையுணர்வைத் தந்து, தேவனைத் துதிபாடச் செய்கின்றதா?

எது, எப்படி இருந்தபோதும், இப்போதாவது திருச்சபையைச் சூழ்ந்துள்ள ஆபத்தை நீ உணர்கிறாயா? அவ்வாபத்திற்கு நீ கூடக் காரணமாக இருந்துவிடலாம் என்பது உனக்குப் புரிகிறதா? இயேசு நேசிக்கும் திருச்சபைக்கு ஊறு விளைவிக்கும் கைங்கரியத்திற்கு, கிறிஸ்தவனான நீ உடந்தையாக இருப்பதா? கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்களின் அலட்சியப்போக்கே, இன்று திருச்சபைக்குப் பேராபத்தைத் தோற்றுவித்திருக்கின்றது என்பதை உணர்கிறாயா? நாம் ஒழுங்காகத் திருமறையின் போதனையின்படி நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் மட்டுமே இவ்வாபத்திலிருந்து நம்மையும், திருச்சபையையும் காத்துக்கொள்ள முடியும் என்பதை நீ அறிவாயா?

### கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் (*Parachurch Organizations*) அலட்சியப்போக்கு

இன்னுமொருவிதத்தில் திருச்சபை, இன்று நேற்றென்றில்லாமல் 'பரா-சர்ச்' (*Parachurch*) என்று அழைக்கப்படும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களால் அலட்சியப் படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வமைப்புகளை நாம் ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிடும் நோக்கத்திலோ, அல்லது வெறுமனே குறைகூற வேண்டும் என்ற நோக்கத்திலோ, இங்கு எழுதவில்லை. இந்த ஸ்தாபனங்களைச் சார்ந்த பலர் ஆசிரியருக்கு நல்ல நண்பர்கள்; தெய்வபக்தியுள்ள நல்ல கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவ உலகிற்கு, இந்த ஸ்தாபனங்களால் பல நன்மைகளும் உண்டு. உதாரணமாக, கிறிஸ்தவ இலக்கியத்துறையில், 'பேனர் ஒப் ட்ருத்' போன்ற பல நிறுவனங்கள், புத்தகங்களை வெளியிட்டு பெருமைப்படத்தக்க பணிகளைச் செய்து வருகின்றன. சில அமைப்புகள் வேதத்தைப் பல மொழிகளில் மொழிபெயர்க்கும் செயலிலும் ஈடுபட்டுள்ளன. உண்மையில், சபையைப் பாதிக்காமல் இந்த ஸ்தாபனங்கள் செய்யக்கூடிய ஊழியங்கள் அநேகம்.

இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம். இன்று உலகில் பல பாகங்களில் கிறிஸ்தவக் கல்லூரிகளின் தேவை உணரப்பட்டு வருகின்றது. அரசாங்கங்கள் நடத்தும் பாடசாலைகளில் கிறிஸ்தவத்திற்குப் புறம்பான போதனைகள் குழந்தைகள் மேல் திணிக்கப்படுவதால், திருமறையின் போதனையின்படி பெற்றோர்கள் தங்கள் கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து தம் குழந்தைகளுக்கு வீட்டிலேயே கல்வி பயில்விக்க முயல்கிறார்கள். வேதம், இது பெற்றோர்களுடைய பொறுப்பு என்று தெளிவாகக் கூறுகின்றது. இது சபை செய்ய வேண்டிய ஒரு காரியமல்ல. பெற்றோர்கள் கூட்டாகச் சேர்ந்து இதனைச் செய்யலாம். ஆகவே, அப்படிச் செய்யும்போது இது ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனமாக உருவெடுக்கின்றது. ஆனால், இந்த ஸ்தாபனம் சபைக்குரிய காரியங்களைச் செய்ய முற்படும்போது, அது தனது பொறுப்பைமீறிச் சபையின் இடத்தையும் ஆக்கிரமிக்கின்றது. கிறிஸ்தவக் கல்லூரியாகிய இந்த ஸ்தாபனம் சபையை ஆக்கிரமிக்காதவரை, சபைக்குரிய காரியங்களைச் செய்ய முற்படாதவரை அதன் ஊழியத்தை நாம் நியாயப்படுத்தலாம்.

இருந்தபோதும், நாம் குறைகூறுவது, திருச்சபை செய்ய வேண்டிய, திருச்சபைக்கே கொடுக்கப்பட்டுள்ள காரியங்களைச் செய்யமுற்படும் ஸ்தாபனங்களைத்தான். வேதத்தில் தெளிவாகத் தேவன் திருச்சபையைப்பற்றிப் போதித்திருக்க, கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் பல, அத்திருச்சபையையே உதாசீனம் செய்து வருகின்றன. பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு, திருச்சபையின் மகிமையைப்பற்றி எடுத்துச் சொல்லும்போது, 'தேவனுடைய வீட்டில் நீ எப்படி நடக்க வேண்டுமென்று அறிந்திருக்க வேண்டும்' என்று வற்புறுத்துகிறான். அதற்கான காரணத்தையும் விளக்கும் பவுல், 'அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கின்றது' என்று கூறுகின்றான். இவ்வாறாக, கர்த்தரின் அன்புக்குட்பட்டு, உலகில் வளர்ந்து வரும் அத்திருச்சபையை ஒதுக்கித்தள்ளி, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்தில் ஏறினவரான இயேசு, அதற்கென அளித்துள்ள ஊழியங்களைத் (எபேசி. *4:11-13*) தம்மனவிருப்பப்படி, தங்கள் நிறுவன வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் இவ்வமைப்புகள் வேதத்திற்குப் புறம்பாகவே செயல்பட்டு வருகின்றன.

திருமறையில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளை, சபைநிறுவுதலாக இருக்க, அதை மறந்துவிட்டு, வேறுவித ஊழியங்களில் ஈடுபடுவது, முக்கியமாக இளைஞர்களைக் கவருதல் இவர்களில் சிலருடைய 'தொண்டாக' இருக்கின்றது. கிறிஸ்துவை அறிந்து, திருமறையைப் போதிக்கும் தேவனுடைய சபையொன்றில் காலூன்றி, வளர்ந்து வரவேண்டிய எத்தனையோ இளைஞர்கள் இத்தகைய அமைப்புகளால் பாதிக்கப்பட்டு, சபை வாழ்க்கைக்கே உபயோகமற்றுப்போனது சபைப்போதகரான, ஆசிரியரறிந்த உண்மை. ஓரிடத்தில் இருக்க முடியாமல், ஊழியம் செய்ய வேண்டும் என்ற வெறியோடு, இதற்கென்ன தகுதி தனக்குண்டு என்றெல்லாம் ஆராயாமல் எங்கெங்கோ இன்றும் திரிந்து கொண்டிருக்கும் பல நல்ல இளைஞர்களையும் நானறிவேன்.

பொதுவாக இந்த ஸ்தாபனங்கள் தாங்கள் செய்யும் காரியங்களுக்குக் கொடுக்கும் நியாயம், திருச்சபைகள் ஒழுங்காக, இவற்றைச் செய்யத்தவறுவதால் தாங்கள் இவற்றைச் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது என்பதுதான். எங்கெங்கு, ஒழுங்கான திருச்சபைகள் இல்லையோ அங்கெல்லாம் இவர்கள் காளான்களைப்போல் தலையெடுத்துவிடுகிறார்கள். ஒருவிதத்தில் இவர்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் திருச்சபைகளின் பொறுப்பற்ற தன்மையைத்தான் குறைகூற வேண்டும். திருச்சபை என்ற பெயரில், திருமறையைத் தூக்கி எறிந்துவிட்டு 'லிபரல்' கொள்கைகளைப் பின்பற்றி கள்ளர்குகைகளாகக் காட்சியளிக்கும் பல சமயக்குழுக்களே (*Denominations*) இன்று இத்தகைய நிறுவனங்களுக்கு 'நொருக்குத்தீனி' போட்டு வருகிறார்கள். அதற்காகத் திருச்சபைகளைச் சீர்திருத்தி, வேதத்தைப் பின்பற்றும் தேவசபைகளாக, அவை இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளாமல், ஸ்தாபனங்கள் அமைத்து சபை செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய முற்படுவது நியாயமான செயலல்ல.

திருச்சபை வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் எதிரிடையாக வும், ஆபத்தாகவும் அமைந்துள்ள, கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் நாம் அவதானிக்க முடிகிற சில தவறான காரியங்களை மட்டும் இங்கே நான் விளக்க விரும்புகிறேன். திருச்சபையின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு இவற்றை நாம் ஆராய வேண்டியிருப்பதால் இதனை எம்மால் தவிர்க்க முடியாதிருக்கின்றது.

*1.* இத்தகைய கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் சீரான, முழுமையான போதனைகளைக் கொண்டிருப்பதில்லை. இவர்களது ஊழியத்தின் வளர்ச்சிக்கு, எல்லா கிறிஸ்தவ சமயக்கிளைகளினதும், சபைகளினதும் உதவி தேவையாக இருப்பதால் அவர்கள் எல்லோரையும் திருப்திப்படுத்தக்கூடிய விதத்தில், சுருக்கமாக இவர்களது விசுவாச அறிக்கை அமைந்திருக்கும். இதன் அவசியத்தை 'ஜெரி வைட்' என்ற

'நெவிகேட்டர்ஸ்' (**Navigators**) நிறுவனத்தின் பொறுப்பாளர்களில் ஒருவர் தான் எழுதிய புத்தகத்தில் (*The Church & the Parachurch*) வலியுறுத்தியுள்ளார். 'சமயக்கிளைகள் கிறிஸ்தவர்களைக் குழப்பியடிக்கின்றன. கோட்பாடுகள், போதனைகளின் அடிப்படையில் சபைகள் பிரிவுபடுவது கிறிஸ்துவை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்றது. அத்தோடு, இத்தகைய பிரிவுகளினால் கூட்டாகச் செய்ய வேண்டிய காரியங்களையும், சபைகளால் செய்ய முடிவதில்லை' என்று இவர் தன் புத்தகத்தில் எழுதியுள்ளார். இக்கூற்றில் ஓரளவிற்கு உண்மையிருந்தபோதும், அது முழுப்பூசணிக்காயையும் சோற்றில் போட்டு மறைப்பது போலாகும். அநாவசியமாக சபைகள் பிளவுபட்டு நிற்பது கர்த்தருக்கே அடுக்காத காரியமாக இருந்தபோதும், எல்லோரோடும் கூட்டுச்சேர வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, தங்களுடைய போதனைகளையெல்லாம் தூக்கி எறிந்துவிட வேண்டும் என்று வேதம் எங்குமே எடுத்துச் சொல்லவில்லை. கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் பல இதற்காகவே தெளிவான, சீரான, போதனைகளைக் கொண்டிருப்பதில்லை. இத்தகைய ஸ்தாபனங்களில் பல 'ரோமன் கத்தோலிக்க சபையையும்' கிறிஸ்தவ சபையாகத் தயங்காது ஏற்றுக் கொள்கின்றன. ஏனெனில் இவர்களுடைய அடிப்படைக் குறிக்கோள், எங்கெல்லாம் தாம் காலூன்றிவிட முடியுமோ, அங்கெல்லாம் எதைச் செய்தாவது நுழைந்துவிட வேண்டுமென்பதுதான். திருமறையின் முழுமையான போதனைகளைக் கொண்டு வளர்ந்து வரும் சபைகளில் இத்தகைய ஸ்தாபனங்களுக்கு இடமிருக்க முடியாது. ஏனெனில், அச்சபைப் போதனைகளுக்கு எதிராக இவர்களது போதனைகள் அமைந்துவிடக்கூடிய சாத்தியமிருப்பது மட்டுமல்லாது, அச்சபைப் போதனைகளை ஊக்குவிப்பதாகவும் இந்த ஸ்தாபனங்களின் ஊழியம் அமையாது.

2. இத்தகைய கிறிஸ்தவ ஸ்தாபன ஊழியர்கள் பலரின் சபை வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதில்லை. பெயரளவில்தான் இவர்கள் சில சபைகளில் அங்கத்தினர்களாக இருக்கின்றார்களே தவிர, சபைக்குத் தங்களை முழுதாக ஒப்புக் கொடுப்பதில்லை. இவர்கள் தாம் ஊழியம் செய்யும் ஸ்தாபனங்களில் ஊதியம் பெறுவதால், சபைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. சபை வாழ்க்கையை ஒழுங்காகக் கடைப்பிடிக்காத ஒருவர் மற்றவர்களுக்கு, ஆவிக்குரிய வாழ்வைப்பற்றிப் போதிப்பதெப்படி? திருச்சபை பற்றிய அடிப்படைக் கோட்பாட்டிலேயே வேறுபாடிருப்பதால், திருமறையைத் தெளிவாகப் பின்பற்றும் சபைகளால், இவ்வமைப்புகளை ஆதரிக்கவோ, இவற்றோடு ஒத்துழைக்கவோ முடியாது.

3. வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்யும் ஸ்தாபனங்கள், வாலிபர்கள் தங்கள் இயக்கத்தையே எப்போதும் சார்ந்திருக்கும்படியான நிலையை ஏற்படுத்துகிறார்கள். அதனால் அவர்கள் வேதத்தின்படி சுயமாக சிந்தித்து செயல்பட முடியாமல், சபை வாழ்க்கைக்கும் தகுதியற்றவர்களாக மாறிவிடுகிறார்கள். வாலிபப்பிராயத்தைக் கடந்தபின் இவர்களால் வாழ்க்கையைத் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. இந்நிறுவனங்களால் பாதிக்கப்பட்ட அநேக இளைஞர்கள் தான்தோன்றித்தனமாக செயல்பட்டு வருவது ஆசிரியரறிந்த உண்மை.

4. கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் நாம் பொதுவாகக் காணக்கூடிய மிக ஆபத்தான போதனை திருச்சபையைக் குறித்ததாகும். ஜெரி வைட் தனது புத்தகத்தில், 'கடவுள் உள்ளூர் சபைகள் மூலம்தான் தன் குழந்தைகள் மத்தியில் பிரதானமாகச் செயல்படுகின்றார் என்றால், எந்த உள்ளூர் சபையின் மூலம்?' என்று வீறாப்போடு கேட்கிறார். ஏனெனில் அவரைப் பொறுத்தவரையில் திருமறையைத் துவம்சம் செய்யும் 'கெரிஸ்மெட்டிக் பரவசக்குழுவும், 'லிபரல்' கோட்பாடுகளை விவஸ்தையில்லாமல் கடைப்பிடிக்கும் சமயக்கிளைகளும் ஒன்றுதான். உலகளாவிய சபையை (*Universal Church*) நாம் நிராகரிக்காமல், திருமறைக்கு மதிப்புக் கொடுத்து வரும், சமகொள்கைகளைக் கொண்ட சபைகளோடு ஐக்கியப்பட்டுத் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதுதான் வேதம் போதிக்கும் உண்மை. அதைவிட்டு, சபையென்ற பெயரை மட்டும் வெறுமனே சுமந்து கொண்டிருக்கும் கூட்டத்தாரோடு ஐக்கியத்தில் வரும்படியாக வேதம் எங்குமே போதிக்கவில்லை (எபேசியர் *4*). இதைத்தான் தங்கள் சுயவசதியின் பொருட்டு பல கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் இன்று செய்து வருகின்றன.

அதுமட்டுமல்லாது, இக்கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் பல உள்ளூர் சபைகளின் அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில், இவர்கள் நடத்தும் வாலிபர் கூட்டங்களுக்கும், ஏனைய வேதபாடக் கூட்டங்களுக்கும் இத்தகைய சபை அதிகாரம் இடைஞ்சலாய் அமைந்துவிடும் என்பதால்தான். உள்ளூர் சபைகள் தம் சபை மக்களைச் சரியாகக் கவனித்துக் கொண்டால் இவர்களுக்கு ஆள் கிடைப்பது அரிது. ஆனால், ஜெரி வைட், 'ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வரங்களும், தாலந்துகளும், உள்ளூர் சபைக்கு வெளியில் ஏனைய கிறிஸ்தவர்களுடைய வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும்' என்று வாதிக்கிறார். ஆனால் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படும் வரங்களின் உபயோகத்தைப்பற்றி வேதம் போதிக்கும் சில முக்கியமான உண்மைகளை இவர் மறந்துவிட்டார். இவ்வரங்கள் சபையினாலும், மூப்பர்களினாலும் அங்கீகரிக்கப்பட்டே உள்ளூர் சபையிலும், அதற்கு வெளியில், சபைமூலமாக, சபையதிகாரத்திற்குட்பட்டு, ஏனைய இடங்களிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது திருமறையின் போதனை. பவுல் அப்போஸ்தலன் இதற்கு ஒரு நல்ல உதாரணம். தான் கிறிஸ்தவனாக மாறியபின், தன் மனம்போனபடி செயல்படாமல் ஏனைய அப்போஸ்தலர்களுக்குக் கட்டுப்பட்டுப் பவுல் ஊழியம் செய்ததாக வேதம் போதிக்கின்றது (அப்போஸ். *9:26-30; 13:1-3*). ஆகவே, கிறிஸ்தவர்கள் தான்தோன்றித்தனமாகச் செயல்படாது திருச்சபைக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து, திருச்சபை மூலமாக செயல்பட வேண்டும்.

கடவுள், திருவருட்சாதனங்கள் என்று அழைக்கப்படுகின்ற ஞானஸ்நானம், திருவிருந்து, சபை ஒழுங்குமுறை, மேய்ப்பர்களின் கவனிப்பு ஆகியவற்றை சபைக்கே கட்டளையிட்டுத் தந்திருக்கின்றாரே தவிர, அவற்றை வேறு எந்த ஸ்தாபனமும் நடைமுறைப்படுத்த அனுமதியளிக்கவில்லை. சபை வாழ்க்கையை அலட்சியப்படுத்தும் ஸ்தாபனங்கள், தனிநபர்கள் இறுதியில் தங்களுடைய கீழ்ப்படியாத்தன்மையினால் கர்த்தரின் ஆசீர்வாதத்தைத்தான் இழக்கின்றார்கள்.

இவ்வாறு திருமறையின் போதனைகளைத் துஷ்பிரயோகம் செய்யும் ஸ்தாபனங்களின் பிடியில் இருந்து சபையையும், நம்மையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நமக்குண்டு. (தொடரும்)

**இப்பத்திரிகையின் மேலதிக பிரதிகள் தேவையானோர் எமக்கு எழுதி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். இதனை ஏனையோருக்கும் அறிமுகப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். உங்களது கருத்துக்களும், ஆதரவும் இவ்வூழியத்திற்குத் துணைபுரியும்.**

**R. Bala, Editor, Phone (09) 527 1522**
**The Bible Lamp**
**P. O. Box 62-159, Sylvia Park, Auckland**
**New Zealand**



# வில்லியம் கேரி

**'கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்' என்று கூறி, வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கே மகோன்னதமாக சேவை செய்தவரும், நவீனகால அருட்பணி ஊழியத்திற்கு அடிக்கல் நாட்டியவருமான வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம்.**

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாக, இங்கிலாந்திலே தோன்றிய நவீனகால மிஷனரி இயக்கத்தின் காரணகர்த்தாவாக இருந்த மனிதர்தான், லெஸ்டர் என்ற பிரதேசத்தில் வாழ்ந்த வில்லியம் கேரி என்பவர். மேலைத்தேய நாடுகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, கீழைத்தேய நாட்டுக் கிறிஸ்தவர்களும், கடந்த வருடம் கேரியின் அற்புத சாதனைகளின் இருநூறாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடினார்கள். கேரி இன்று நம்மத்தியில் இல்லை. ஆனால், அவரது சாதனைகளும், அச்சாதனைகளுக்குத் தூண்டுகோலாக அமைந்த, அவரது அசைக்க முடியாத நம்பிக்கைகளும் நம்மைவிட்டு என்றும் அகலாது. கேரியை நினைவு கூர்வதால் மட்டும், அவருடைய நம்பிக்கைகளின்படி நாம் நடக்கிறோம் என்று பொருளல்ல. அவருக்கு விழா எடுத்துவிடுவதால் மட்டும், அவர் காட்டிய வழியின்படி எல்லோரும் நடந்துவிடப்போவதுமில்லை. வில்லியம் கேரி யார் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? அவர் செய்த சாதனைகள்தான் என்ன என்று சரிவரப்புரிந்து கொண்டவர் யார்? சாவையே துச்சமாக மதித்து, பல இக்கட்டுகளுக்கு மத்தியில், இந்தியாவின் கல்கத்தாவிற்குச் சென்று, கிறிஸ்தவ ஊழியத்திற்காகத் தன்னையே செராம்பூரில் அர்ப்பணித்த, சான்றோனாகிய கேரியின் சரிதத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?

### பிறப்பும், வளர்ப்பும்

ஐந்து குழந்தைகளின் மத்தியில் மூத்தகுழந்தையாக, ஆகஸ்ட் 17-ல், 1761-ம் ஆண்டில் அவதரித்தார் கேரி. அவருடைய தந்தை எட்மன்ட் ஒரு நெசவாளி. 1767-ல் தன்னுடைய சொந்த முயற்சியாலும், திறமையினாலும் அவர் பள்ளிக்கூட வாத்தியாராக உயர்வு பெற்றார். இளம் வில்லியத்திற்கு தாவரவியல், பிரயாண அநுபவங்கள் ஆகியவற்றில் அதிக ஆர்வமிருந்தது. பன்னிரண்டு வயதிருக்கும்போது, பள்ளிக்கூடத்தைவிட்டு விலகி தோட்டக்கலையில் ஆர்வம் காட்டினார் கேரி. ஆனால், தோல் வியாதியினால் பாதிக்கப்பட்ட வில்லியம், தோட்டக்கலையை விட்டு விட்டு வேறு தொழில் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. கேரியின் தகப்பனார், அவரைத் தன்னைப்போலவே சபைக்காரியங்களில் வைராக்கிய முள்ளவரும், பிட்டிங்டன் என்ற இடத்தில் சப்பாத்துத் தொழிலில் ஈடுபட்டிருந்தவருமான கிளார்க் நிக்கலஸ் என்பவரிடம், சப்பாத்துத் தொழிலில் பயிற்சி பெற அனுப்பினார்.

### கிறிஸ்தவ அநுபவம்

கேரியோடு சப்பாத்துத் தொழிலில் பயிற்சி பெற்ற, ஆங்கிலிக்கன் திருச்சபைக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாத (*Nonconformist*) சக ஊழியனான ஜோன் வார் என்பவன், தன்னைப் போன்றவர்கள் ஹெக்கிள்டன் என்ற இடத்தில் நடத்தும் ஒரு ஜெபக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு கேரியை அழைத்தான். ஆங்கிலிக்கன் சபையின் வழிமுறைகளின்படி, வைராக்கியத்தோடு வளர்ந்திருந்த கேரி, அச்சபைக் கோட்பாடுகளுக்கு எதிரான விதத்தில் ஆராதனைகளை நடத்தி வந்த இக்கூட்டத்தாரை ஆரம்பத்தில் வெறுத்தார். ஜோன் வாரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தன்னுடைய வாதங்கள் போதிய வலிமையற்றிருந்தபோதும், தன்சபைக்கொள்கைகளை உறுதியாக எடுத்துரைக்க அவர் தவறியதில்லை. ஆனால், இறுதியில் தனது வைராக்கியத்தை இழந்து, ஜோன் வாரோடு அவருடைய ஆராதனைக் கூட்டங்களுக்குப் போனார். பின்னால், நாம் இப்படிச் செய்துவிட்டோமே என்று வருத்தப்பட்டுத் தமது குற்ற உணர்வை அகற்றிக்கொள்ள கேரி, தனது சொந்த சபையின் ஞாயிறு ஆராதனைகளில் மூன்று முறை கலந்து கொண்டார். ஜோன் வார், கேரிக்கு இயேசுவை அறிமுகப்படுத்த கடும் முயற்சிகள் எடுத்தார். தன் சுயமுயற்சியால், ஆன்மீக அறிவையும், சீர்திருத்தத்தையும் அடைய முயன்று எல்லாம் ஓய்ந்த பின்பு, கேரி 1779-ல் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் அனுபவத்தைப் பெற்று, ஆங்கிலிக்கன் திருச்சபைக்கு எதிரான (*Nonconformist*) கூட்டத்தாரோடு சேர்ந்தார். அந்திரேயா, தன் சகோதரனான பேதுருவுக்கு இயேசுவை அறிமுகப்படுத்தியது போல, பொட்டஸ்புரி இளைஞனான ஜோன் வார் போலஸ்புரி வாலிபனான கேரியின் ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்தார். இந்தியாவின் நவமணி, இயேசுவின் மணிமுடியில் அணிகலனாக அமைந்ததில், தனக்கும் பங்கிருக்கின்றது என்று ஜோன் வாருக்கு அப்போது தெரிந்திருந்ததா என்ன?

சான்றோர் சரிதம்


### முழுக்கு ஞானஸ்நானம்

கிறிஸ்தவ அனுபவத்தைப் பெற்றுக் கொண்ட நாள் முதல், வேதத்தில் இருந்துதான் எல்லா அறிவையும் பெற வேண்டும் என்ற தாகத்தோடு அதைப்படிக்கத் தொடங்கினார் கேரி. அத்தகைய விசுவாசத்தோடு கூடிய வேத ஆராய்ச்சி, குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றி அவர் மனதில் கேள்வி எழுப்பியது. குழந்தை ஞானஸ்நானத்திற்கும், விசுவாசத்தாலேயே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் என்ற புதிய ஏற்பாட்டுப் போதனைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அவர் உணர்ந்தார். இதை மேலும் ஆராய்ந்த பின்னர், குழந்தை ஞானஸ்நானக் கொள்கையை அவர் முற்றாகக் கைகழுவினார். கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வேதத்தின் தெளிவான போதனையைப் பின்பற்றி முழுக்கு ஞானஸ்நானத்தையும் பெற்றுக் கொண்டார்.

வில்லியம் கேரியின் ஆரம்பகால கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தோர் அநேகர். அவர்களில் ஒருவர் தோமஸ் ஸ்கொட். என்ற போதகர். அவருடன் அளவளாவும் சந்தர்ப்பங்களையும், அவரது அருளுரைகளைக் கேட்பதையும் கேரி என்றுமே தவறவிட்டதில்லை. ஸ்கொட்டின் நட்பு கேரியின் இதயத்திலிருந்த பல சந்தேகங்களைப் போக்கி உதவியது.

(தொடரும்)

# வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள்



## அறிமுகம்

*கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெயிடில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்ததொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மினிஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையையும்', வெஸ்மின்ஸ்டர் திருமறைக்கல்வி நூல், பென்ஜமின் கீச்சின் திருமறைக்கல்வி நூல் ஆகியவற்றைத் தழுவிய திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார்.*

வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவப் போதனைக்கு, எக்காலத்திலும் இல்லாதவகையில் இக்காலத்தில் தேவை ஏற்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைகளின் உறுதியான சத்தியங்களில் ஊறித்திளைத்து, இவ்வுலகை எதிர்நோக்க வேண்டிய அவசியத்தையும் நாம் உணர்கிறோம். கடவுளையறியாத நம் சமுதாயத்தின் சிலந்தி வலையிலிருந்தும், உணர்ச்சிகளுக்கு மட்டும் தூபமிடும், பகுத்தறிவற்ற, பரவலான இன்றைய 'கிறிஸ்தவத்தின்' கொடுக்குப் பிடியிலிருந்தும் நம் குழந்தைகளையும், மக்களையும் காக்க வேண்டிய பெருங்கடமை நம்முன் நிற்கிறது. உறுதியான வேதக்கோட்பாடுகளில் தரித்து நிற்க வேண்டிய அவசியத்தைக் கிறிஸ்தவர்கள் இன்று உணர வேண்டியது அவசியம். முக்கியமாக நமது சபைகளில் புதிதாக இயேசுவை அறிந்து கொள்ளும் மக்களும், அவரை அறிந்து கொண்டிருந்தும், வேதசத்தியங்களில் ஆழமான அறிவில்லாது நம்மிடத்தில் வரும் மக்களும் திருமறையில் தெளிவான அறிவைப்பெற்றுக் கொள்ள 'திருமறைக்கல்வி' ஒரு அருமையான சாதனமாக அமையும்.

> ***'இன்று எம்மத்தியில் அதிகரித்து வரும் போலிப் போதனைகளிலிருந்து எம்மைக்காத்துக்கொள்ள ஒவ்வொரு குடும்பமும் வினாவிடை முறையிலமைந்த திருமறைக்கல்வியைப் பெற வேண்டியதன் அவசியத்தை நான் உணர்கிறேன். ஆகவே, வெஸ்ட்மின்ஸ்டர், பாப்திஸ்து திருமறைக்கல்வி நூல்களின் அடிப்படையில் என்னுடைய சபை மக்களின் நன்மைக்காக, இவ்வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவப் போதனைப் பாடநூலைத் தொகுத்துள்ளேன். தங்கள் குடும்பத்திலோ, வகுப்புகளிலோ இதனைப் போதிப்பவர்கள், சிறுவர்களும் விளங்கிக் கொள்ளும்விதத்தில் இதனை விளக்க வெண்டும். ஆனால், இதனை அனைவரும் மனப்பாடம் செய்தல் அவசியம். சிறுவர்களும் வளர, வளர பின்னால் இவற்றைப் புரிந்து கொள்வார்கள்.' (தனது திருமறைக்கல்வி நூலின் முகவுரையில் ஸ்பர்ஜன் எழுதியது)***

'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த போதனை சிலருக்குப் புதிதாக இருக்கலாம். இது என்ன என்ற கேள்வியும் எழலாம். இதனை விளக்க வேண்டியது அவசியம். வேதம் பலவகையான மலர்களைக்கொண்ட ஒரு பெரும் மலர்வனத்தைப் போன்றது. அதில் மனதைக்கிள்ளும் பலஜாதி வண்ணமலர்கள் உண்டு. ஆனால், செயற்கைப் பூங்காவில் காணப்படுவதுபோல் இங்கு மலர்கள் வரிசைக்கிரமமாக இருப்பதில்லை. சத்தியங்கள், கானகத்து மலர்களைப்போல், திருமறையில் இங்கும், அங்கும், எங்கும் பரந்து விரிந்து காணப்படுகின்றன. அவற்றை முறையாகத் தொகுத்து, விளக்காவிட்டால் புதிதாகக் கடவுளை அறிந்து கொண்டவர்கள் தெளிவான, முழுமையான வேத அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறாக திருமறையில் பரந்து, விரிந்து காணப்படும் வேதசத்தியங்களைத் தெளிவாகவும், முறையாகவும், வினாவிடை ரூபத்தில் சுருக்கமாகத் தொகுத்துத் தருகின்றது திருமறைக்கல்வி.

வேதத்தை முறையாகப் பயில்வது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது. வேதசத்தியங்களை சரிவர அறிந்து கொள்ளாவிட்டால் தனிநபருடைய வாழ்க்கையும், சபை வாழ்க்கையும் பாதிக்கப்படும். சத்தியத்தில் தெளிவில்லாத சபை, ஓநாய்களைப் போன்ற போலிப்போதனைகளுக்கு இரையாக வேண்டிய நிலை ஏற்படும். இத்தகைய கேடான கள்ளப்போதனைகள் திருச்சபை தோன்றிய காலத்தில் இருந்தே அதைத்தகர்க்க முயற்சி செய்து வந்துள்ளன. இதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவப் போதனைகளை உள்ளடக்கிய திருமறைக்கல்வி உதவும். ஆகவே, இப்பாட முறையில் வேதத்தைப் பயிலும் எவரும், அதன் போதனைகளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இவ்வினாவிடைக் கிறிஸ்தவப்போதனை எமது மூதாதையரின் திருமறைக்கல்வி நூல்களையும், கிரேன்ட் ரெபிட்ஸ் சீர்திருத்த பாப்திஸ்து சபையால் (*Reformed Baptist Church, Grand Rapids*) வெளியிடப்பட்ட திருமறைக்கல்வி நூலையும் அடிப்படையாகக் கொண்டது. இதன் விளக்கங்கள், கருத்துக்கள் மட்டும் ஆசிரியருக்குச் சொந்தமானவை.

கேள்வி 1: மனித வாழ்வின் முக்கிய குறிக்கோளென்ன?

கடவுளை என்றென்றும் மகிமைப்படுத்துவதும், அனுபவிப்பதுமே மனித வாழ்வின் முக்கிய குறிக்கோளாகும்.

*(1 கொரிந்தியர் 10:31; சங்கீதம் 73:25)*

**விளக்கக்குறிப்பு:** 'கடவுளை மகிமைப்படுத்துவது' - என்றால் நாம் கடவுளுக்கு மகிமையைத் தேடிக்கொடுப்பது என்று பொருளல்ல. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்பிருந்தே, என்றென்றும் மகிமையுள்ளவராக இருக்கின்றார். ஆகவே, அவரது மகிமையை நாம் எம்மில் பிரதிபலிப்பது என்று பொருள் கொள்ள வேண்டும். கிறிஸ்துவை அறிந்து கொண்ட ஒருவனால் மட்டுமே இது இயலக்கூடிய காரியம். சங்கீதம் 19:1-ஐப் பார்க்கவும்.

கேள்வி 2: கடவுள், நாம் அவரை மகிமைப்படுத்தவும், அனுபவிக்கவும், வழிகாட்டியாக எத்தகைய நியதியைத் தந்துள்ளார்?

பதில்: பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்ட திருமறையே, நாம் அவரை மகிமைப்படுத்தவும், அனுபவிக்கவும் வழிகாட்டக்கூடிய ஒரே நியதியாக இருக்கின்றது.

*(2 தீமோ. 3:16; 1 யோவான் 1:3)*

**விளக்கக்குறிப்பு:** திருமறையே கடவுளின் ஜீவனுள்ள வார்த்தை. அது தவறிழைக்கவியலாததும் (Infallible), வழுவற்றதும் (Inerrant), போதுமானதுமானது (Sufficient); சாதாரண மனிதனும் புரிந்து கொள்ளக்கூடியவிதத்தில் தெளிவுடையதாக (Clear) கடவுள் அதனை நமக்குத் தந்துள்ளார் என்பதை நாம் உணர வேண்டும்.

கேள்வி 3: திருமறையின் முக்கியமான போதனையென்ன?

பதில்: கடவுளைக்குறித்து மனிதன் எதை விசுவாசிக்க வேண்டும் என்றும், மனிதனிடம் இருந்து கடவுள் எத்தகைய கடமைகளை எதிர்பார்க்கின்றார் என்றும் திருமறை முக்கியமாகப் போதிக்கின்றது.

*(2 தீமோத்தேயு 1:13; கலாத்தியர் 1:8-9; மீகா 6:8; சங்கீதம் 19:7-11)*

கேள்வி 4: திருமறை வலியுறுத்திக்கூறும் அனைத்துப் போதனைகளும் நம்பிக்கைக்குரியவையா?

பதில்: தேவ ஆவியினால் அருளப்பட்ட பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்ட திருமறையின் எல்லாப்பகுதிகளும் தவறிழைக்கவியலாதவை யாகவும் (*Infallible*), வழுவற்றதாகவும் (*Inerrant*) அமைந்திருப்பதால், அவை வரலாறு, அறிவியல், கோட்பாடுகள், ஒழுக்கவியல், சமயக்கட்டுப்பாடுகள் மற்றும் வேறு எந்தத்தலைப்பிலும், வலியுறுத்திக்கூறும் அனைத்துப் போதனைகளும் நம்பிக்கைக்குரியவையே.

*(2 தீமோத்தேயு 3:16; 1 தெசலோனிக்கேயர் 2:13)*

கேள்வி 5: கடவுள் யார்?

பதில்: கடவுள் உருவமற்றவரும், எல்லையற்றவரும், நித்தியமானவரும், மாறாத்தன்மையுடைய வருமாவார். தன்னியல்புடைய அவர், ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, நன்மை, உண்மை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியவர்.

*(யோவான் 4:24; வெளி. 4:8; சங்கீதம் 90:2; யாக்கோபு 1:17; யாத்திராகமம் 35)*

கேள்வி 6: கடவுள் ஒருவரைத்தவிர, வேறு கடவுளர் உளரா?

பதில்: கடவுள் ஒருவரே; அவர் ஜீவனுள்ள, மெய்யான தேவன்.

*(யாத்திராகமம் 6:4; எரேமியா 10:10)*

கேள்வி 7: கடவுளில் எத்தனை நபர்கள் உள்ளனர்?

பதில்: கடவுளில் மூன்று நபர்கள் உள்ளனர்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி; இவர்கள் மூவரும் ஒரே கடவுளாய், ஒரே சாரத்தையும், (உள்ளியல்பு) சம வல்லமையையும், மகிமையையும் கொண்டுள்ளார் கள்.

*(மத்தேயு 28:19; 2 கொரி. 13:14; 2 யோவான் 10:30; அப்போஸ். 5:3-4)*

**விளக்கக்குறிப்பு:** கடவுள் மூன்று நபர்களாக இருப்பதை நாம் மூன்று கடவுள்கள் என்று பொருள் கொள்ளக்கூடாது. கடவுள் ஒருவரே, ஆனால், அவர் மூன்று நபர்களாக செயற்படுகின்றார்.

கேள்வி 8: கடவுளின் ஆணைகள் (Decree) யாவை?

பதில்: கடவுளுடைய ஆணைகளாவன, அவர் தனது சுய மகிமையின் பொருட்டு, தனது சித்தத்தின் ஆலோசனையின்படி அமைந்த நித்திய நோக்கத்தின்படி, நடைபெறக்கூடிய அனைத்தையும் ஏற்கனவே முன்குறித்துள்ளமை யாகும்.

*(தானியேல் 4:35; ரோமர் 11:36; எபேசியர் 1:11-12; நீதிமொழிகள் 16:4)*

**விளக்கக்குறிப்பு:** கடவுளுடைய ஆணைகள் ஒருபோதுமே தவறாதவை. அவரது முழுமையான நித்திய நோக்கமே இதற்குக் காரணம். இருந்தபோதும், அவர் ஏற்கனவே, நடக்கப்போகும் காரியங்களை அறிந்திருந்து, அவற்றை முன்குறித்தார் என்று தவறாக நாம் விளக்கங் கொள்ளக்கூடாது. அத்தோடு, பாவத்திற்கு அவர் மூலகாரணமுமல்ல. கடவுளின் ஆணைகள் அவரது நித்திய வல்லமை, ஞானம், அழிவற்ற சீரான திட்டங்கள் ஆகியவற்றை எடுத்து விளக்குகின்றன..

கேள்வி 9: கடவுள் எவ்வாறு தனது ஆணைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்?

பதில்: கடவுள் தனது ஆணைகளை படைப்பு, பராமரிப்பு ஆகிய செயல்களின் மூலம் நிறைவேற்றிக் கொள்கிறார்.

*(வெளி. 4:11; ஏசாயா 44:24-28; அப்போஸ். 14:17; மத்தேயு 6:26)*

கேள்வி 10: படைப்புச் செயல் என்பது யாது?

பதில்: படைப்புச் செயலாவது, கடவுள், தனது வார்த்தையின் வல்லமையால், ஆறே நாட்களில், வெறுமையிலிருந்து, எல்லாவற்றையும் மிகவும் நல்லவையாக உருவாக்கியதாகும்.

*(ஆதியாகமம் 1:1; கொலோசெயர் 1:16; எபிரேயர் 11:3; யாத்திராகமம் 20:11; ஆதியாகமம் 1:31)*

**விளக்கக்குறிப்பு:** கடவுள் வெறுமையிலிருந்து (Out of nothing) எல்லாவற்றையும் உருவாக்கினார் எனறு போதிக்கிறது திருமறை. நவீன அறிவியல் இதனை ஏற்றுக் கொள்வதில்லை. உலகம் சிறிது சிறிதாகப் பல்லாயிரம் நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது (The theory of evolution) என்பது அதன் வாதம். ஆனால், நாம் திருமறையின் தெளிவான, அதிகாரமுள்ள போதனையைத்தான் விசுவாசிக்கிறோம். எவருடைய துணையுமின்றி, ஆறே நாட்களில், சர்வ வல்லமையுள்ள கடவுள் இவ்வுலகை உருவாக்கினார். இந்த ஆறு நாட்களும், பல்லாயிரம் வருடங்களல்ல (Theistic Evolution). மனித அறிவுக்கெட்டிய, சாதாரண ஆறு நாட்களில், குறுகிய இடைவெளியில் கடவுள் உலகைப் படைத்தார்.

# 'கிருபையின் போதனைகள்' என்றால் என்ன?

கடந்த இதழில் 'கிருபையின் போதனைகள்' என்றால் என்ன என்று சுருக்கமாகப் பார்த்தோம். இவ்விதழ் அப்போதனையை இன்று ஏன் அநேகர் சரிவரப்புரிந்து கொள்ளாதிருக்கிறார்கள் என்று ஆராய்கிறது. இதற்கு முக்கிய காரணம், கடவுளை அறிந்து கொள்வதில் தேவகிருபையின் பங்கு என்ன, மனிதனின் பங்கு என்ன என்ற கேள்விக்குப் பலரும் பதில் தேடி அது தெரியாமல் அலைவதுதான். இக்கேள்வி எத்தகைய ஒரு மாற்றத்தை திருச்சபை வரலாற்றிலே ஏற்படுத்தியது என்று அறிந்து கொள்ள நாம் ஒரு நெடுந்தூரப் பயணத்தை மேற்கொள்ளப் போகிறோம். சரித்திரத்தில் பல நூற்றாண்டு களைத் தாண்டிக், கடல் கடந்து, பிரித்தானிய நாட்டை நாம் அடைவோம். அந்நாட்டிலே 5-ம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த ஒரு மனிதன்தான் பெலேஜியஸ் (*Palegius*) என்பவன். இம் மனிதனின் போதனைகள் கிறிஸ்தவ உலக வரலாற்றில் ஒரு பெரும் மாற்றத்தையே பிற்காலத்தில் ஏற்படுத்தின. இந்த மனிதனுக்கும், ஏற்கனவே கடந்த இதழில் நாம் சந்தித்த, இதே காலகட்டத்தில் ஹிப்போ என்ற இடத்தின் பிஷப் ஆகவிருந்த ஆகஸ்தினுக்கும் (*Augustine*), இடையில் நிகழ்ந்த தேவகிருபையையும், பாவத்தையும் பற்றிய வாதப்பிரதாபங்கள், கிருபையின் போதனைகளுக்கு இக்காலத்தில் ஏன் இத்தனை எதிர்ப்பு என்று நாம் புரிந்து கொள்ள உதவும். அப்படி இவர்கள் இருவருக்குமிடையில் இருந்த கருத்து வேறுபாடுகள்தான் என்ன?

**'கிருபையின் போதனைகள்' என்ற சொற்றொடர் பலருக்குப் புதிதாக இருக்கலாம். சிலர் அது குறித்துக் கேள்விப்பட்டிருக்கலாம். மேலும் சிலர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தும், அதில் தெளிவில்லாது இருக்கலாம். இக்கட்டுரை இப்போதனகளை திருமறையின் அடிப்படையில் சரித்திர பூர்வமாக ஆராய்ந்து அறிமுகப்படுத்துகிறது.**

பெலேஜியஸ், மனிதன் பாவியாகப் பிறக்கவில்லை என்றும், சுயமாகவே நல்லதையும், கெட்டதையும் செய்யக்கூடியவனாக இருந்தான் என்றும் போதித்தார். மனிதனில் பாவம் என்று ஒன்றில்லை என்றும், அதனால் அவன் பாவத்தைப்பற்றிய எந்த ஒரு குற்ற உணர்வும் அற்றவனாக இருக்கிறான் என்றும் இம்மனிதர் வாதிட்டார். ஆகவே, பெலேஜியஸின் போதனையின்படி, ஆதாமின் வழித்தோன்றல்கள், பாவத்தால் கறைபடியாது, சுதந்திரமான சித்தத்தோடு எதையும் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள்; பாவமென்பது மனித இயல்பில் அல்லாமல் அவனது செயல்களையே சார்ந்திருக்கின்றது; ஒருவிதத்தில், மனிதன் பாவம் செய்ய வேண்டிய அவசியமே இல்லாது, நல்லதையே செய்யக்கூடிய சித்தத்தைக் கொண்டிருக்கின்றான் என்பது இவரின் வாதம். தவறான வழிகாட்டுதலின் மூலமாகவும், கல்வியினாலுமே மனிதர்கள் பாவம் செய்ய வேண்டிய நிலையிலுள்ளார்கள் என்று பெலேஜியஸ் போதித்தார்.

அதேநேரம், பாவசுபாவமில்லாத மனிதன் எக்காரியத்தையும் செய்வதற்கு தேவகிருபையின் அவசியமற்று இருக்கின்றான் என்றும் இவர் போதித்தார். இவர் கிருபையைத் தேவனிடத்தில் இருந்து பெறவேண்டியதாகக் கருதாமல், அது இயல்பிலேயே மனிதனிடத்தில் காணப்படுவதாகக் கருதினார். இக்கிருபை மனிதனுக்கு நிச்சயம் உதவக்கூடுமானாலும், அதன் உதவியில்லாமல் மனிதனால் எல்லா நன்மைகளையும் செய்ய முடியும் என்று பெலேஜியஸ் போதித்தார். ஆகவே, பாவமற்ற மனிதன், தன்சுய சித்தத்தினாலும், தனது வல்லமையினாலும், கடவுளைஅறிந்து கொள்ள முடியும் என்பது பெலேஜியஸின் வாதம். வில்லியம் கண்ணிங்கம் (**William Cunningham**) என்ற வேத வல்லுனர், இத்தகைய போதனைகள் பேலெஜியஸுக்கு முன்பே, மூன்றாம், நான்காம் நூற்றாண்டு காலப்பகுதிகளிலும் பிறமத ஊடுருவல்களினால், திருச்சபைப்பிதாக்கள் மத்தியில் உலவியதாகக் கூறுகிறார்.

ஆகஸ்தீன் இப்போதனைகளை தீவிரமாக எதிர்த்தார். இவை திருமறைக்கு எதிரானவை என்று வேதத்தில் இருந்து எடுத்து விளக்கினார். ஆதாமின் வீழ்ச்சியினால் பாவம் உலகில் பிரவேசித்ததனால், உலக மக்களனைவரும், தங்கள் உடல், பொருள், ஆவியனைத்தும் பாவத்தால் கறைபடிந்து, தேவனை அறிந்து கொள்ள இயலாதிருக்கின்றார்கள் என்று ஆகஸ்தீன் திருமறையில் இருந்து விளக்கமளித்தார். பாவம், மனிதனை முற்றாகப் பாதித்து கடவுளுக்குகந்த காரியங்களை அவன் செய்ய முடியாதபடி தன் கட்டுக்குள் வைத்திருக்கிறது. ஆகவே, பாவியாகிய மனிதன் தேவ கிருபையின் உதவியில்லாமல் கடவுளை அறிந்து கொள்ள முடியாது என்றும், இக்கிருபையையும் தேவனே, இலவசமாக, மனம் திரும்பும் எந்தவொரு மனிதனுக்கும் அளிக்கிறார் என்றும் அவர் போதித்தார். இக்கிருபையின் மூலமாகவும், பரிசுத்த ஆவியினாலும், பாவத்தால் கறைபடிந்த அகக்கண்கள் திறக்கப்பட்டு, பாவத்தில் இருந்து மனம் திரும்பும் ஒவ்வொருவரும் விசுவாசத்தை தேவனிடத்தில் இருந்து ஈவாகப் பெற்றுக் கொள்கிறார்கள் என்று ஆகஸ்தீன் போதித்தார்.

**அரங்கம் - 2**

கர்த்தர் எழுப்பிய மனிதனான ஆகஸ்தீன், பெலேஜியஸின் போதனைகளைத் திருமறையின் உதவியோடு தகர்த்துச் சிதறடித்தார். 416-ல் கார்த்தேஜ் (**Carthage**) என்ற இடத்தில் கூடிய 'திருச்சபைக் கவுன்சில்' பெலேஜியஸை திருச்சபைக்கு முரணான கோட்பாடுடையவன் எனக்கண்டனம் செய்தது. 431-ல் எபேசியாவில் கூடிய 'கவுன்சில்' பெலேஜியஸின் போதனைகள் திருமறைக்கு முரணானவை என்று பிரகடனப்படுத்தியது. ஆனால், ஓடு மீன் ஓடி உறுமீன் வரும் வரையும் வாடியிருக்கும் கொக்கைப்போல, பெலேஜியஸின் திருமறைக்கெதிரான போலிப் போதனைகள், காலத்தோடு அழிந்து போகாமல், அமைதியாகக் காத்திருந்தது. அது எவ்வாறு பிற்காலத்தில் உயிர் பெற்று, வேறு பெயர்களில் திருமறையையும், திருச்சபையையும் அழிக்கக் கங்கணம் கட்டியது; கிருபையின் போதனைகளைக் களங்கப்படுத்திப் பலநாடுகளிலும் புகுந்து பெயர் அடைய முயற்சித்தது; என்று அடுத்த இதழில் அவதானிப்போம். (தொடரும்)

# அப்போஸ்தலப்பணி இன்றும் தொடர்கிறதா?

இன்று பல கிறிஸ்தவர்கள் மனதில் இருந்து வரும் ஒரு குழப்பம், அப்போஸ்தலப் பதவியும், பணியும் இன்று தொடர்கிறதா? இல்லையா? என்பது. இது பற்றி விபரம் தெரியாதவர்கள், கர்த்தருக்கெதிராகப் பேசிவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்திலும், பயத்திலும் இந்தக் கேள்வியையே எதிர் நோக்கத் தயங்குகிறார்கள். ஆனால், இன்றைய சூழ்நிலையில் ஆராயப்பட வேண்டிய கேள்வி இது. என்னைப் பாதிக்கப் போகும் ஒரு காரியமல்ல என்று நினைத்து, இதைத் தவிர்ப்பதால், இதன் பிடியில் இருந்து நாம் தப்பிவிடவும் முடியாது. பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் இருண்டு விட்டது என்று அர்த்தமல்ல. ஆகவே திருமறை இதைப்பற்றி என்ன சொல்கிறது என்று நாம் ஆராய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அநேகர் இன்று அப்போஸ்தலப் பதவியும், பணியும் தொடர்கிறது (*Apostolic ministry*), என்ற நம்பிக்கையில், சபைகளில் அப்போஸ்தலர்களை நியமிப்பதோடு, அவர்கள் செய்த அடையாளங்களையும், அற்புதங்களையும் நாமும் தொடர்ந்து செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் அவற்றை நாடி அலைகிறார்கள். இவர்களுடைய நம்பிக்கை திருமறையைச் சார்ந்ததா? என்று ஆராய நாம் இரண்டு முக்கிய காரியங்களை இங்கே அவதானித்தல் அவசியம்.

### 1. அப்போஸ்தலரின் அடையாளங்கள் (*The Signs of the Apostles*)

திருச்சபை வரலாற்றில் அப்போஸ்தலருடைய காலம் ஒரு முக்கியமான காலப்பகுதியாகும். மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் அமைந்த இஸ்ரவேலின் இறையாட்சிக் காலப்பகுதி, தனது இறுதி நிலையை அடைந்து, புதிய உடன்படிக்கைக் காலப்பகுதியின் தோற்றத்திற்கு விட்டுக் கொடுத்த காலமிது. யூதரல்லாத அந்நிய நாடுகள் நற்செய்தியை அறிந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்ற பொற்காலமிது. 'அமைதிக் காலம்' என்று அழைக்கப்படுகின்ற, நாநூறு ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு புதிய வெளிப்படுத்தலின் அவசியமேற்பட்ட காலமிது.

திருச்சபையில் பெருமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த இவ் வரலாற்றுக் காலப்பகுதியில் கடவுள், ஒரு பெரு நோக்க நிறைவேற்றுதலுக்காக நான்கு ஆவிக்குரிய வரங்களைத் தந்தார். வேதம், முழுமை பெறாத நிலையில், தேவனுடைய வெளிப்படுத்தல்களைச் சபைக்கு அறிவித்த தீர்க்கதரிசனம், அத்தோடு, குணப்படுத்தும் வரங்கள், அற்புதங்கள் செய்தல், பலவிதமான அந்நிய பாஷைகள் ஆகியவற்றையும் தேவன் தந்தார். இவை எல்லாமே, 'அடையாளங்களாக' செயல்பட்டன. (அடையாளம் என்ற சொல்லுக்கு வேதத்தில், அதை அவதானிப்பவருக்கு, நிகழப்போகும் ஒரு முக்கியமான செயலைக்காட்டிக் கொடுக்கும் சாதனம்

**ஆய்வுக் கட்டுரை**

என்று பொருள்) உதாரணமாக, யோவான் தான் எழுதிய சுவிஷேசத்தில், இயேசு இவ்வுலகில் செய்த ஏழு அடையாளங்களை எடுத்துக்காட்டி, 'இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது' என்று கூறுவதைப் பார்க்கிறோம் (யோவான் 20:31).

திருச்சபை வரலாற்றில் 'அடையாளங்கள்' எப்போதுமே முக்கிய பங்கை வகித்தன. சிறப்பாக அப்போஸ்தலர்களுடைய காலத்தில், அவை மெசியாவின் வருகையை அத்தாட்சிப்படுத்துபவையாக இருந்தன. அதுமட்டுமல்லாது அவை, முக்கியமாக இஸ்ரவேலருக்கு, இஸ்ரவேலின் இறையாட்சியின் முடிவையும், கி.பி. 70-ல் நிகழவிருந்த யெருசெலேம் ஆலயத்தின் அழிவையும், எடுத்துக் காட்டுவதாக இருந்தன.

'அடையாள வரங்களின்' தன்மையையும், அவை அளிக்கப்பட்டதன் நோக்கங்களையும் திருமறை தெளிவாகப் போதிக்கிறது. இதைவிளக்கும் ஒரு வேதப்பகுதியாக மார்க் *16:17-18* அமைந்துள்ளது. இப்பகுதியில் கூறப்பட்டுள்ள வரங்கள் எல்லோருக்கும் சொந்தமானதல்ல. *17*-ம் வசனத்தில் காணப்படும் 'விசுவாசிக்கிறவர்களால்' என்ற வார்த்தை இலக்கணத்தின்படி, எதிர்காலத்தில் விசுவாசிக்கப் போகிறவர்களைக் குறிப்பிடாமல், ஏற்கனவே இயேசுவை விசுவாசித்தவர்களைக் (இறந்தகாலம்) குறிக்கின்றது. இப்பகுதி அமைந்துள்ள சந்தர்ப்பத்தின்படி, அவர்கள் அப்போஸ்தலர்கள் (*14*-ம் வசனம்) என்றும் அறிந்து கொள்கிறோம். ஏனெனில், இயேசு இங்கே அப்போஸ்தலரின் அவிசுவாசத்தைக் கடிந்துகொள்வதைப் பார்க்கிறோம். *15, 16*-ம் வசனங்கள் தனிநிலை மொழியாக அமைந்த வசனங்கள் (*Parenthesis*). ஆகவே, இயேசு குறிப்பாக அப்போஸ்தலரிடம் பேசிய காரியங்களை எல்லோருக்கும் பொதுவாகக் கொடுத்த போதனை என்று அர்த்தம் கொள்ளக் கூடாது. அதுவுமல்லாமல், பாம்பு கடித்தோ, நஞ்சைக் குடித்தோ, இறவாத் தன்மையுடைய அற்புத சரீரத்தை சாதாரண கிறிஸ்தவர்கள் கொண்டிருப்பார்கள் என்று திருமறை எங்குமே போதிப்பதில்லை.

இத்தகைய அடையாளங்களில் சிலவற்றைத்தான் பவுல் அப்போஸ்தலன் *2* கொரி. *12:12*-ல் குறிப்பிடுகிறான். பழைய ஏற்பாட்டில், போலித்தீர்க்கதரிசிகளை அடையாளங்கண்டு கொள்ள கர்த்தர் சில வழிமுறைகளை ஏற்படுத்தியது போல (எண். *13:1-3; 18:20-22*), புதிய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள் உண்மையான அப்போஸ்தலன் யார் என்று இனங்கண்டு கொள்ள, இத்தகைய அடையாளங்களைத் தந்தார். அப்போஸ்தலருக்குரிய இந்த 'அடையாளங்கள்', மாற்கு *3:14-15; 16:17-18* ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள, குணப்படுத்தல், அந்நிய பாஷை பேசுதல், பிசாசு விரட்டுதல் ஆகியவற்றையும், அற்புதங்கள் செய்தல் (*2* கொரி. *12:12;* ரோமர் *15:19*), தீர்க்கதரிசனம் (மத்தேயு *10:40-41;* அப்போஸ். *5:3-9; 13:6-12; 14:8-10*), என்பவற்றையும், மிக முக்கியமாக - இத்தகைய அடையாள வரங்களையும், வெளிப்படுத்தலையும், **ஜெபித்துக் கரம்வைத்து ஏனையோருக்கு அளிக்கக் கூடிய தன்னிகரில்லா வல்லமையையும்** (எபிரேயர் *2:4*) உள்ளடக்கியிருந்தன. புதிய ஏற்பாட்டுக் காலப்பகுதியில் கடவுள், இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களின் மூலமாகவே இத்தகைய 'வெளிப்படுத்தலையும்', 'அடையாளங்களையும்' மற்றவர்களுக்கு அளித்தார்.

(கடைசிப் பக்கம் பார்க்க)

# புத்தக விமர்சனம்



## திருமறையை விளக்கும் முறை

*வில்பிரட் கர்ட், பக்கங்கள் 76*
*தமிழ்நாட்டு நற்செய்தி பட்டதாரிகள் ஐக்கியம்,*
*குரு மெடிகல் ஹால், திருச்சி 600 010.*

இந்நூலாசிரியரான வில்பிரட் கர்க், தனது வாழ்க்கையின் பெரும் பகுதியைத் தமிழ் நாட்டில், பாப்திஸ்து திருச்சபை ஊழியத்தில் செலவிட்டார். தெளிவான, அடிப்படை விதிகளைப் பயன்படுத்தி, வேதத்தைத் தமிழ்க்கிறிஸ்தவர்கள் முறையாக அறிந்து கொள்ள வேண்டும், என்ற இவரது அடங்காத்தாகத்தின் விளைவே இந்நூல். **1977**-ல் வெளிவந்த 'திருமறை விளக்கம்' வேதத்தை விளங்கிக் கொள்ளப் பயன்படுத்த வேண்டிய அத்தியாவசியமான விதிகளை எல்லோரும் புரிந்து கொள்ளும் விதத்தில் விளக்குகிறது.

திருமறையை சரிவரப் படித்து, வாழ்வில் கைக் கொள்ளாது, எவருமே கிறிஸ்துவில் அன்பு செலுத்தவோ, தம்வாழ்வில் நன்மையடையவோ, முடியாது. அவ்வாறு திருமறையைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதை விளங்கிக்கொள்ள அவசியமான, வேதத்தில் காணப்படும், பல விதிமுறைகளை நாம் கவனத்தோடு அவதானித்து, அவற்றைப் பயன்படுத்தி வேதப்பகுதிகளை விளங்கிக்கொள்ள வேண்டும். வேதத்தைப் படிக்கும் போது மற்ற சாதாரண புத்தகங்களைப் படிக்க நாம் பயன் படுத்தும் சில விதிகளைப் பயன்படுத்தல் அவசியம். இலக்கணம், எழுதப்பட்ட சந்தர்ப்பம், சொற்பிரயோகங்கள், படிக்கும் பகுதி சரித்திரச் சம்பவமா? உவமானமா? அல்லது போதனையா? என்பது போன்ற அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். பலர், இன்று இவ்விதிமுறைகளைக் கவனத்தில் எடுக்காது, தாம் நினைத்த விதத்தில் வேதவிளக்கமளிக்க முற்படுகின்றனர். இது திருமறையையும், அதை நமக்குத் தந்த தேவனையும் அவமதிக்கும் செயலாகும்.

வில்பிரட் கர்ட், தமிழ் மக்கள் மத்தியில் பல வருடங்கள் வாழ்ந்த அனுபவத்தைக் கொண்டு இப்புத்த கத்தை எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. வேதத்தைத் தவறான முறையில் விளக்குவதற்கு உதாரணமாகத், தமிழ் நாட்டில் தான் ஒரு கூட்டத்தில் கேட்ட பிரசங்கத்தை அவர் ஓரிடத்தில் இவ்வாறு விளக்குகிறார். 'ஆன்மீகக் கூடாரம்' என்ற தலைப்பில் அக்கூட்டத்தில் பேசிய அருளுரையாளர், வேதத்தில் எங்கெங்கு 'கூடாரம்' என்ற வார்த்தை காணப்படுகின்றதோ அப்பகுதிகளையெல்லாம் பயன்படுத்தி, அவற்றிற்கு ஆன்மீக விளக்கமளித்ததாகக் கூறுகிறார். இது சொல்லகராதியைத் தவறாகப் பயன்படுத்தியதன் விளைவு. இவ்வருளுரையாளர் இச்சொற்கள் காணப்படும் சந்தர்ப்பத்திற்கேற்றவிதத்தில் அவற்றைப் பயன்படுத்தத் தவறிவிட்டார். அதுமட்டு மல்லாது வெறும் தலைப்பை மட்டும் முதலில் தேடிப், பின்னால் அத்தலைப்பிற்கேற்ற பேச்சுப்பொருளைத் தேடமுயன்றதால், இவர் வேதத்தைத் தவறான விதத்தில் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது.

திருமறையை விளக்கும்போது நான்கு அடிப்படை விதிகளை நாம் அவதானித்தல் அவசியம் என்கிறார் ஆசிரியர்.

**1.** வேதப்பகுதிகளை விளக்கும்போது, அப்பகுதிகளை, அவற்றில் காணப்படும் வார்த்தைகளின் சாதாரண அர்த்தத்தின்படியும், இலக்கணத்தின்படியுமே விளக்க வேண்டும்.

**2.** எந்தவொரு வேதப்பகுதியும், அது காணப்படும் உடனடிச் சந்தர்ப்பத்திற்கேற்ப (*Immediate Context*) விளக்கப்படவேண்டும்.

**3.** அத்தோடு, அவ்வேதப்பகுதி அமைந்துள்ள முழுப்பகுதி யின் (***Larger Context***), அமைப்பிற்கேற்ற முறையிலும் அது விளக்கப்பட வேண்டும்.

**4.** அவ்வேதப்பகுதி, திருமறையின் பொதுவான போதனைகளுக்கேற்பவும், அவற்றிற்கு முரண்படாத வகையிலும் விளக்கப்பட வேண்டும். ஏனெனில் வேதமே, வேதத்தை விளக்குகின்றது. வேதம் வேதத்தோடு ஒப்பிடப்பட்டு விளக்கப்பட வேண்டும்.

தீர்க்கதரிசனங்கள், முன்னடையாளங்கள், உவமான ங்கள், உருவகங்கள், எபிரேயப் பாடல்கள், அக்காலத்து கலாச்சாரம், நாகரிகம் போன்றவை எவ்வாறு விளக்கப்பட வேண்டும் என்றும் ஆசிரியர் இந்நூலில் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார். முக்கியமாக தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு விளக்கப்பட வேண்டும் என்ற பகுதி இன்றைய சூழ்நிலையில் அக்கறையோடு படிக்க வேண்டிய ஒரு பகுதி. தமிழில் இத்தகைய நூல்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்துள்ள ஆசிரியருக்கு தமிழ்க்கிறிஸ்தவர்கள் நிச்சயம் கடமைப்பட்டுள்ளார்கள்.

**1983**-ல் இந்நூல் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. இலகுவான ஆங்கிலத்தில் எல்லோரும் புரிந்து கொள்ளும் படியாக அதனையும் ஆசிரியரே எழுதியுள்ளார்.

கேட்பவர்கள் உணர்ச்சிவசப்படும்படி கதை சொல்லுதல், சொந்த அனுபவங்களின் அடிப்படையில் வேத விளக்கமளித்தல் என்ற பாணியில், பொதுவாக பிரசங்கங்களும், போதனைகளும் அமைந்திருக்கும் இந்நாட் களில் அருளுரையாளர்களும், ஞாயிறு பாடசாலை ஆசி ரியர்களும், கிறிஸ்தவர்கள் அனைவருமே தவறாது வாங்கி வாசித்துப் பயனடைய வேண்டிய புத்தகமிது. வேதத்தின் மூலமாக மட்டுமே கர்த்தர் இன்று நம்மோடு பேசுவதால் அவருடைய வார்த்தையைத் தெளிவாக, சந்தேகமில்லாமல் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா.

**வாசகர்கள் 'திருமறை விளக்கத்தின்' தமிழ்ப்பிரதியை வெளியீட்டாளர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். சவரின் கிறேஸ் சபையின் ஓர் ஊழியமான 'சவரின் கிறேஸ் புத்தக நிலையம்' இதன் ஆங்கிலப் பிரதியை நியூசிலாந்தில் விநியோகிக்கிறது. ஆங்கிலம் தெரிந்த போதகர்கள், கிறிஸ்தவ ஊழியர்கள், தங்கள் ஊழியத்திற்கு இந்நூல் துணைபுரியுமெனக் கருதினால், அதைப் பெற்றுக் கொள்ள 'சவரின் கிறேஸ் சபை' உதவி செய்யும். உங்கள் ஊழிய விபரம், முகவரி ஆகியவற்றை அனுப்பிவைப்பீர்களானால், இலவசமாக இந்நூலை நாங்கள் அனுப்பிவைப்போம்.**

# கேள்வி? - பதில்!




*இச்சஞ்சிகை ஆசிரியரிடம் பொதுவாகக் கூட்டங்களில் பலர் கேட்ட முக்கியமான கேள்விகளையும் பதிலையும் ஏனையோரது பயன்கருதி இப்பகுதியில் வெளியிடுகிறோம்.*

## வேதத்தை எப்படிப் புரிந்து கொள்வது?

**○ வேதத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியுமா? என்னால் முடியவில்லையே! உங்களால் உதவமுடியுமா?**

✸ இதற்கு விளக்கமாக விடை கூறவே நான் விரும்புகிறேன். ஆனால், இப்பத்திரிகையில் இதுபற்றி முழுமையாக ஒரு தடவை எழுத எண்ணியிருப்பதால், இப்போதைக்குப் பயன்படும்படியாக இக்கேள்விக்கு சுருக்கமாக பதில் அளிக்க முயற்சி செய்கிறேன்.

இந்தக் கேள்விக்கு பதில் வேண்டுமானால் முதலில் நாம் வேதத்தின் சிறப்பான அம்சங்களையும், அதன் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். திருமறையாகிய வேதம் கடவுளைப்பற்றி நமக்கு அறிவிக்கிற சத்திய வசனம். அதன் மூலம் மட்டுமே நாம் கர்த்தரைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். கடவுளே தம்மைப்பற்றி நாம் அறிந்து கொள்ளும்படியாகத் திருமறையை நமக்கு வழங்கியுள்ளார். ஆகவே, தம்மை நாம் அறிந்து கொள்ளும் அறிவைத்தரும், திருமறையைத் தந்த கடவுள் அதை நாம் புரிந்து கொள்ள முடியாத விதத்தில் தந்திருக்க முடியாது. இவ்வுலகில் ஆவிக்குரிய வாழ்விற்குத் தேவையான அனைத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக, திருமறையில் கடவுள் நமக்குத் தெளிவாகத் தந்திருக்கிறார் (பேதுரு 1: ; 2 தீமோத்தேயு 3:16-17). கிறிஸ்துவை அறிந்து கொண்ட எந்த சாதாரண மனிதனும், ஆவியின் துணையோடு, தானே வாசித்துப் புரிந்து கொள்ளும் வகையில் வேதம் இவற்றை விளக்குகிறது.



அதேநேரம், திருமறையில் கடினமான, எளிதில் புரிந்து கொள்ள முடியாத சில பகுதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றின் பொதுவான போதனைகளை, அவை காணப்படும் பகுதிகளோடு தொடர்புபடுத்திப் படிக்கும்போது புரிந்து கொள்ளாம். அவற்றின் ஆழமான உண்மைகள் சிலவேளை நமது அறிவிற்கு அப்பாற்பட்டுக் காணப்படலாம். அதனால் நாம் மனம் தளர வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இப்பகுதிகள் திருமறையின் போதனைகளை எவ்விதத்திலும் குறைவுபடுத்துவதில்லை. பழைய ஏற்பாட்டின் எசேக்கியல் போன்ற தீர்க்கதரிசனப் புத்தகங்களின் சில பகுதிகளும், வெளிப்படுத்திய சுவிஷேசத்தின் சில பகுதிகளையும் இங்கு உதாரணமாக குறிப்பிடலாம். இப்பகுதிகள், பூரணமற்ற நம் அறிவிற்கு அப்பாற்பட்டுத்தான் இருக்கின்றனவே தவிர, திருமறை தெளிவுள்ளதாகவும், பூரணமானதுமாகத்தான் இருக்கின்றது.

அத்தோடு நாம் அவதானிக்க வேண்டிய இன்னுமொரு உண்மை, நம் ஆண்டவர் நமக்குத் தேவையானதை மட்டுமே திருமறையில் வெளிப்படுத்தியிருக்கின்றாரே, தவிர நாம் அறிய விரும்புவதையெல்லாம் அதில் வெளிப்படுத்தவில்லை (எண்ணாகமம் 29:29). சிலர் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள தெளிவான போதனைகளை அறிந்து, அவற்றைக் கடைப்பிடித்து வாழ முற்படாமல், கடவுள் நமக்குத் தெரிவித்திராத உண்மைகளை அறிந்து கொள்வதில் காலத்தை வீணடிக்கிறார்கள்.

ஆகவே, கடவுள் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக, திருமறையைத் தந்திருப்பதால் அதை நாம் நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அதை நாம் ஆவியின் துணையோடு, வேதப் பகுதிகளை வேதத்தோடு ஒப்பிட்டு முறையாகப் படிக்க வேண்டும். நாம் நினைத்தவாறு வேதப்பகுதிகளுக்குப் பொருள்கூற முற்படாது, தெளிவான விளக்கம் தரும் பகுதிகளைப் பயன்படுத்தி, தெளிவற்றதாக நமக்குத் தென்படும் பகுதிகளின் போதனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜெபத்தோடும், தியானத்தோடும் கர்த்தரை விசுவாசித்து வேதத்தை நாம் படிப்போமானால், ஆவியின் வழி நடத்தலுடன் வேதசத்தியங்களை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அதேநேரம், சத்தியத்தைத் தெளிவாகப் போதிக்கும் ஒரு சபையின் துணையும் நமக்கு அவசியம். இது நாம் வழி தவறிவிடாதபடி இருக்கத் துணை புரியும்..

**திருமறைத்தீபம்**

*மலர் 1 ஜூலை - செப்டெம்பர் 1995 இதழ் 3*

*காலாண்டிதழான 'திருமறைத்தீபம்' 'சவரின் கிரேஸ் சபையினால்' (Sovereign Grace Church) வெளியிடப்படுகிறது.*

*ஆசிரியர்: R. பாலா*
*தொலைபேசி: (09) 527 1522*

*முகவரி:*

| | |
|---|---|
| *திருமறைத்தீபம்* | The Bible Lamp |
| *த. பெட்டி எண் 62-159* | P. O. Box 62 - 159 |
| *சில்வியா பார்க்* | Sylvia Park |
| *ஆக்லாந்து* | Auckland |
| *நியூசிலாந்து* | New Zealand |

*(4-ம் பக்கத் தொடர்ச்சி)*

இந்நான்குவித வரங்களையும் அப்போஸ்தலர் கரம் வைத்து ஜெபிப்பதன் மூலம் மற்றவர்களுக்கு அளித்தார்கள். அப்போஸ்தலர்களிடமின்றி, வேறு விதத்தில் எவராவது இவ்வடையாள வரங்களையும், வெளிப்படுத்தலையும் பெற்றுக் கொண்டதாக வேதத்தில் எங்குமே கூறப்படவில்லை. அதே வேளை, அநேகர் அப்போஸ்தலர்களின் தன்னிகரில்லாப்பணி மூலம் இவ்வரங்களைப் பெற்றுக் கொண்டதாக வேதம் அறிவிக்கின்றது. அப்போஸ்தலர்கள் தங்களுடைய அப்போஸ்தலப் பணியின் மூலம், தனிப்பட்டவர்களுக்கும், சபைகளுக்கும் இவ்வரங்களை அளித்தார்கள். அப்போஸ்தலர், ஸ்தேவான் மீதும், பிலிப்பு மீதும், ஜெபம் செய்து கரம் வைத்து இவ்வரங்களை அளித்ததாகவும், அதன்பின்பே அவர்கள் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்ததாக அப்போஸ். 6:5-8; 8:6 ஆகிய வேதப்பகுதிகளில் வாசிக்கிறோம். அப்போஸ்தலரினாலே மறுபேர் பெற்ற பர்னபா (அப்போஸ். 4:36), எருசலேம் சபையினாலே அந்தியோகியாவிற்கு (அப்போஸ்தலர் இங்கே கரம் வைத்து ஜெபித்திருக்கலாம்) அனுப்பிவைக்கப்பட்டு (அப்போஸ். 11:22), தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தையும் பெற்றுக் கொண்டான் (அப்போஸ். 13:1). பதினெட்டு மாதங்களைக் கொரிந்து நகரிலே சபையெழுப்புவதில் செலவிட்ட பவுல் (1 கொரி. 18:11), தான் அப்போஸ்தலன் என்பதை, அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் அவர்கள் முன் நிரூபித்தான் (1 கோரி. 2:4-5; 2 கொரி. 12:12) அத்தோடு தனது அப்போஸ்தலப்பணி மூலம், மற்றவர்களுக்கு வரங்களையும் பகிர்ந்து கொடுத்தான் (1 கொரி. 1:6-7). ஆகவே, கொரிந்து சபை விசுவாசிகளிடம் அநேக வரங்கள் காணப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

இவற்றிலிருந்து நமக்குப் புலப்படும் உண்மை என்னவெனில், அப்போஸ்தலர் ஜெபித்துக்கரம் வைப்பதன் மூலமே, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எவரும் வரங்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதுதான். ஆகவே, இன்று எவராவது அடையாளங்களையோ, அற்புதங்களையோ செய்ய விரும்பினால், அவர்கள் அவற்றை அப்போஸ்தலரிடமிருந்தே பெற்றுக் கொள்ள முடியும். அப்படியானால் இன்று அப்போஸ்தலப்பணி எம் மத்தியில் தொடர்கிறதா? அது தொடர வேண்டுமானால் அப்போஸ்தலர் இன்று எம்மத்தியில் இருக்க வேண்டும். அது சாத்தியமா? அப்போஸ்தலர் எம் மத்தியில் இன்று இருக்கிறார்களா? என்ற கேள்வியை நாம் அடுத்து சந்திக்க வெண்டும்.

## 2. அப்போஸ்தலருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் (The Qualifications of an Apostle)

அப்போஸ்தலன் (Apostle) என்ற வார்த்தை, 'அபோஸ்டொலொஸ்' (Apostolos) என்ற கிரேக்கப்பதத்தில் இருந்து எடுக்கப்பட்டது. அது, 'அனுப்பி வைக்கப்பட்டவர்' (Sent out) என்ற கருத்தைக் கொண்டுள்ளது. சாதாரணமாகப் பயன்படுத்தும்போது, இது, ஒரு குறிக்கப்பட்ட பணியைச் செய்வதற்காக சபையால் அனுப்பி வைக்கப்பட்ட எவரையும் குறிக்கும். புதிய ஏற்பாட்டில், அருட்பணி ஊழியத்திற்காக சபையால் அனுப்பி வைக்கப்பட்டவர்களைக் குறித்து பொதுவாக அவ்வப்போது, இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (2 கொரி. 8:23; பிலிப்பியர் 2:25). ஆனால், அவ்வாறாக அருட்பணி ஊழியத்திற்கு திருச்சபையால் விசேடமாக அனுப்பப்பட்டவர்கள், தனித்தன்மைவாய்ந்த, அதிகாரமுள்ள அப்போஸ்தலப்பதவியை, இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட அப்போஸ்தலரைவிட வேறுபட்டவர்கள். அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவால் தனிப்பட்டமுறையில் அழைக்கப்பட்டு, மற்றவர்களுக்கு இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்ட வரங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடிய ஆவிக்குரிய சிறப்புத் தன்மையைக் கொண்டிருந்தார்கள். திருமறை, அப்போஸ்தலருக்கிருக்க வேண்டிய சிறப்பான தகுதிகளைத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

1. அவன் கிறிஸ்துவின் இவ்வுலக ஊழியத்தின்போது அவரோடிருந்தவனாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் ஊழியம் அவரது ஞானஸ்நானத்திலிருத்து, உயர எடுததுக் கொள்ளப்பட்டது வரையிலுமானது (அப்போஸ். 1:21-23).

2. அவன் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பார்த்தவனாக இருக்க வேண்டும் (1 கொரி. 15:7; 9:1; அப்போஸ். 1:22; 4::33; 10:39-42).

3. அவன் கிறிஸ்துவால் தனிப்பட்ட முறையில் அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவனாகவும், அதன் கடமைகளைச் செய்யப் பணிக்கப்பட்டவனாகவும் இருக்க வேண்டும் (லூக்கா 6:13; மாற்கு 3:14-15).

4. அவன் ஒரு குறிப்பிட்ட சபை, அல்லது சபைகளின் ஊழியத்தில் ஈடுபட்டவனாக மட்டுமல்லாமல் முழு உலக ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவனாகவும், அதில் ஈடுபட்டவனாகவும் இருக்க வேண்டும் (மத்தேயு 28:19; மாற்கு 16:15).

இத்தகுதிகளின் அடிப்படையிலேயே, இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில், சபை நிறுவுதலுக்கு அவசியமான கிறிஸ்துவைப்பற்றிய செய்தியை எடுத்துச் சொல்லும் பொறுப்பு (மத்தேயு 28:18-20) ஒருவனுக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறாகத் தனக்குக் கொடுக்கப்பட்ட அப்போஸ்தலப் பணியைப்பற்றிப் பவுல் தீத்து 1:1-3 வரையிலான வசனங்களில் தெரிவிக்கின்றான். அதைத்தவிர, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனுக்குரிய தனித்தன்மைவாய்ந்த 'அடையாளங்களும்' இருந்தன. கொரிந்து சபையிலிருந்த சிலர், பவுல் உண்மையில் ஓர் அப்போஸ்தலன் இல்லை என்று மறுதளித்தபோது, தான் ஓர் அப்போஸ்தலன்தான் என்று நிரூபிக்கத் தன்னிடத்தில் இருந்த இத்தகைய அடையாளங்களைப் பவுல் உதாரணங்காட்டி வாதித்தான் (2 கொரி. 12:12; எபிரேயர் நிருபத்தை எழுதினவரும் 2:3-4-ல் இதையே குறிப்பிடுகிறார்).

அப்போஸ்தலர் (தீர்க்தரிசிகளோடு சேர்ந்து) கிறிஸ்து தங்களுக்கு இட்ட பணியாகிய, சபைக்கு அடிக்கல் நாட்டும் கடமையில் ஈடுபட்டார்கள். திருச்சபை வரலாற்றில் ஒருமுறையே நடப்பட்ட இந்த அடிக்கல் தொடர்ந்தும் நாட்டப்பட வேண்டிய அவசியமில்லை (எபேசியர் 2:20). இத்தகைய அடிக்கல் மீதுதான் தனது சபையைக் கட்டப் போவதாக இயேசு பேதுருவிடம் கூறினார் (மாற்கு 16:18). ஏற்கனவே நடப்பட்ட இந்த அடிக்கல்லின் மீது இன்று சபை எழுவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

இவற்றில் இருந்து நாம் அறிந்து கொள்வதென்ன? இத்தகைய அதிகாரங்களையும், பொறுப்பையும், கட்டளைகளையும் இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் எவரும் இன்று உயிரோடில்லை. கிறிஸ்து அத்தகைய அப்போஸ்தலப்பணியை இன்று எவருக்கும் தொடர்ந்தளிப்பதுமில்லை. ஏனெனில், அவை சபைக்கு அடிக்கல்லாக அமையவே கொடுக்கப்பட்டன. ஏற்கனவே அடிக்கல் நடப்பட்டு விட்டதால் கட்டிடத்திற்கு மீண்டும் ஒரு அடிக்கல் தேவையில்லை. அதனால் நமக்கு ஒரு பயனுமில்லை. ஆகவே, இன்று அடையாளங்களையும், அற்புதங்களையும் நாம் நாடியலைய வேண்டிய அவசியமில்லை. இன்று கிறிஸ்தவர்களுடைய பணி, வளர்ந்து வரும் கட்டிடமாகிய திருச்சபையில் ஓர் அங்கமாக இருந்து, கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்விதமாக அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுவது மட்டுமே.